**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2024**

-----------------------------------------------------------------------------------------------------------------

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் தொடர்பை மேம்படுத்தி, பேராதனை – பதுளை - செங்கலடி வீதியின் பதுளை முதல் செங்கலடி வரையிலான 146.75 கிலோமீற்றர் வீதியை புனரமைப்பதன் மூலம் அப்பிரதேசத்தின் போக்குவரத்தை மேம்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் குடிசார் வேலைகள், காணி சுவீகரிப்பு, ஆலோசனை சேவைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய 04 கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 140 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2027 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை*இலங்கை* பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு / கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2024 திசம்பர் 31 இல், நிறைவேற்றப்பட்ட வீதிகளுக்கான செலவு ரூபா. 15,228.77 மில்லியன் பெறுமதியானது குறைவேலைக்கு மாற்றப்படவில்லை. இதன் விளைவாக, குறைவேலையானது அதே தொகையினால் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 15,228.77 | ஏற்றுக்கொள்ளப்பட்டது | நிறைவேற்றப்பட்ட வீதிகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான கையளிப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட ரூபா. 140.33 மில்லியன் பெறுமதியான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் பெறுமதி, மீளாய்வு ஆண்டின் நிதி அறிக்கைகளில் பொறுப்பாகக் கணக்கிடப்படவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையானது அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 140.33 | ஏற்றுக்கொள்ளப்பட்டது | பொறுப்புகள் நிதி அறிக்கைகளில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வு ஆண்டின் நிதி அறிக்கைகளில், ரூபா. 470.55 மில்லியன் பெறுமதியான, 6 நிலுவையில் உள்ள இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் பெறுமதிக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதன் விளைவாக, குறைவேலை மற்றும் ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளுக்கான ஒதுக்கீடு ஆகியவை அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 470.55 | ஏற்றுக்கொள்ளப்பட்டது | நிதி அறிக்கைகளில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 05-இன் பந்தி 43(அ)-இன் படி, அந்த நிதிநிலை அறிக்கை திகதியில் உள்ள இறுதி விகிதத்தில் சொத்துக்களும் பொறுப்புகளும் மாற்றப்பட வேண்டியிருந்தும், எவ்வாறாயினும் மேற்கூறிய தரநிலையின்படி அந்த ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் சமநிலை வேறுபாட்டைச் சரிசெய்யப்பட்டிருக்கவோ அல்லது வெளிப்படுத்தப்பட்டிருக்கவோ இல்லை. | - | நிதி அமைச்சு வழங்கிய அறிவுறுத்தல் கடிதத்தின் அடிப்படையில் சமநிலைச் சரிசெய்தல் மேற்கொள்ளப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டு முதல் கடன்களுக்காகச் செலுத்தப்பட்ட 10 மில்லியன் அமெரிக்க டாலருக்குச் சமனான ரூபா. 1,653.36 மில்லியன் வட்டியானது, 2024 திசம்பர் 31 இல் நிதி அறிக்கைகளில் கணக்கிடப்படவில்லை. இதன் விளைவாக, குறைவேலைகள் அதே பெறுமதியால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | 1,653.36 | ஏற்றுக்கொள்ளப்பட்டது | தொடர்புடைய விவரங்கள் திறைசேரியிலிருந்து பெறப்பட வேண்டியதுடன் வட்டிச் செலவுகள் எஸ்.எல்.பி.எஸ்.ஏ களின்படி கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வு ஆண்டில் நன்கொடையாளரால் 03 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா. 846.19 மில்லியன் தொகை கணக்கிடப்படவில்லை. ஆகையினால், மீளாய்வுஆண்டின் நிதி அறிக்கைகளில் வெளிநாட்டுக் கடன் அதே தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 846.19 | ஏற்றுக்கொள்ளப்பட்டது | கணக்காளர் நிதி அறிக்கைகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை / கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 திகதியிட்ட | செயற்திட்டத்தின் குழுவின் கூட்டம் | வழிநடத்தல் தேர்தல்கள் நிர்வாகத் தாமதங்கள் | மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரிவு 9.3 | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும். இருப்பினும், மீளாய்வு ஆண்டில் இரண்டு வழிநடத்தல் குழு கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. | போன்ற பல்வேறு காரணங்களால், முகாமைத்துவ சுற்றறிக்கையின்படி கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை. | இணங்க கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 2019 ஜனவரி 12 ஆந் திகதிய டிஎம்ஏ/01/2019, இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஆண்டுதோறும் குறைந்தபட்சம் நான்கு கூட்டங்களாவது நடத்தப்பட வேண்டும். இருப்பினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எந்தக் குழு கூட்டமும் நடத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(i) (அ) வீதி புனரமைப்பு**

| **கூறு** | **நடவடிக்கை** | **2024 திசம்பர் 31இல் உள்ளவாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதத்திற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப் பட்ட பௌதீகச் செயலாற்றல் (km)** | **அடையப்பட்ட செயலாற்றல் (km)** | | |
| **முகாமைத்து வத்தின் கருத்துரை** | வீதி புனரமைப்பு | 146.75 | 127.75 | ஒப்பந்தங்கள் 378 நாட்கள் முதல் 879 நாட்கள் வரையிலான தாமதத்துடன் முடிக்கப்பட்டிருந்தன. மேலும், 30 செப்டம்பர் 2023 அன்று முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த 3பி மற்றும் 3சி ஒப்பந்தங்களாகப் பிரிக்கப்பட்ட ஔப்ஜடி 03 ஒப்பந்தமானது, நிறைவேற்றப்படாமல் முறையே 236 நாட்கள் மற்றும் 280 நாட்கள் தாமதத்துடன், 2024 திசம்பர் 31வரை தொடரப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் மந்தமான செயல்பாடு மற்றும் மந்தமான ஒப்பந்த நிர்வாகம் |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் கருத்துரை** | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | செயற்திட்டத்தினால் முறையான செயல் நடவடிக்கைத் திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | ஒதுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு, திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்குள் திட்டத்தின் நோக்கங்களை அடைவதை உறுதி செய்வதற்காக, திட்டத்தின் முழு காலப்பகுதியையும் உள்ளடக்கி, நிதி மற்றும் பௌதீக இலக்குகளை எடுத்துரைத்து, மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்றவற்றில் பொறுப்புகளை நிர்ணயிக்கும் ஒரு விரிவான செயல் திட்டம், செயற்திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | செயற்திட்டத்திற்கான ஒரு விரிவான செயல் திட்டத்தைத் தயாரித்து ஒப்புதல் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (இ) | மீளாய்வு ஆண்டில் செயற்திட்டச் சேமிப்புகளைப் பயன்படுத்தி புதிய ஒப்பந்தத் பொதிகளை தொடங்க இத்திட்டம் முன்மொழிந்திருந்தது. இதன் கீழ், ரூபா. 4,677.47 மில்லியன் மதிப்புள்ள 04 ஒப்பந்தத் பொதிகள் அந்தச் சேமிப்புகளைப் பயன்படுத்திச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தன. ஏஸ்எப்டி சேமிப்புகளின் கீழ் தொடங்கப்பட்ட இரண்டு பொதிகள் முறையே 86 சதவீதம் மற்றும் 81 சதவீத கட்டுமான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தன. மேலும், ஓஎப்ஐடி சேமிப்புகளின் கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த மீதமுள்ள இரண்டு பொதிகள், 2024 திசம்பர் 31வரையிலும்கூட தொடங்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | செயற்திட்டத்தினால் முறையான செயல் நடவடிக்கை திட்டமும் பாதிடும் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும். |

**(ii) காணி சுவீகரிப்பு**

| கூறு | நடவடிக்கை | 2024 திசம்பர் 31இல் உள்ளவாறு | | தாமதம்/ விடயம் கணக்காய்வு | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீகச் செயலாற்றல் காணித் துண்டுகளின் எண்ணிக்கை | அடையப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகளின் எண்ணிக்கை | | |
| காணி சுவீகரிப்பு | உரிமையைப் பதிவு செய்தல் | 2201 | 821 | 2024 திசம்பர் 31இல், பிஎம்யு 2201 காணித்துண்டுகளிற்கு இழப்பீடு வழங்கியிருந்தபோதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதியில், காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44-இன் கீழ் ஆர்டிஏ 821 காணித்துண்டுகளின் உடைமையை மட்டுமே கையகப்படுத்தியிருந்தது. | காணி சுவீகரிப்பு செயல்முறையில் செயல்திறன் இன்மை. |

**முகாமைத்துவத்தின் கருத்துரை**

இழப்பீடு வழங்கப்பட்ட மொத்த 2,201 துண்டுகளில், 1,532 துண்டுகளுக்கு மட்டுமே காணி பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். டிசம்பர் 2024-க்குள் 821 துண்டுகளின் பணிகள் முடிக்கப்பட்டிருந்தன. மீதமுள்ள 711 துண்டுகளில், இதுவரை 119 துண்டுகளின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய துண்டுகளிற்கான பதிவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

காணி சுவீகரிப்பு திட்டத்தின்படி, காணி சுவீகரிப்பு செயல்முறைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்புகளைத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நிர்ணயிக்க வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

**(அ)** லுனுகலாவிலிருந்து பிபிலே வரையிலான (171+800 கி.மீ 190+800 கி.மீ) பொதி, கே.டி. எபர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்ற ஒப்பந்ததாரருக்கு 12 ஜூன் 2017 அன்று ரூபா. 2,006.43 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டது மற்றும் ஒப்பந்தக் காலம் 30 மாதங்கள் ஆகும். ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறன் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவுக்குள் ஒப்பந்தத்தை முடிக்கத் தவறியதன் காரணமாக, கட்டுமானப் பணிகள் 60.32 சதவீதம் மட்டுமே நிறைவடைந்திருந்த நிலையில், 29 ஜூன் 2021 அன்று அந்த ஒப்பந்தம் தொழில் வழங்குனரால் கையகப்படுத்தப்பட்டது. மேலும், அந்த நேரத்தில் ஒப்பந்ததாரருக்கு ரூபா. 1,204.95 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒப்பந்ததாரர் மற்றும் தொழில் வழங்குனர் ஆகிய இருவரின் ஒப்புதலுடன் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்தைக் கோரியிருந்தபோதிலும், எப்ஜடிஜசி இனுடைய ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் பிரிவு 15, ஒப்பந்தத்தை "பரஸ்பரமாக ரத்து செய்வதற்கு" எந்த ஏற்பாடுகளினையும் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. எனவே, 03 ஜூலை 2021 அன்று, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 15 மற்றும் சட்டமா அதிபரின் கருத்து என்பவ்றை கருத்திற்கொள்ளாது பரஸ்பரமாக ரத்து செய்வதற்கு அனுமதி அளித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் இருந்து விலகல் குறித்து விசாரணை நடத்தப்படுவதுடன் தாபனக் கோவையின் பகுதி II, அத்தியாயம் XLVIII, பிரிவு 29-இன் படி பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 17 நவம்பர் 2022 திகதியிட்ட சட்டமா அதிபரின் கடிதத்தின்படி, மேற்கூறிய விடயம் தொடர்பாக, " ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தைத் தெளிவாக மீறியுள்ள நிலையில், பரஸ்பர ரத்துக்காக வீதி ஆபிவிருத்தி அதிகாரசபை எவ்வித "துணை ஒப்பந்தங்களிலும்" ஈடுபடக்கூடாது என்பது எனது அபிப்பிராயம் என பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரால் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டதற்கமைவாக. ஒப்பந்தத்தை ரத்து செய்யும்போது, ஆரம்பத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளுக்கு உட்பட்டு வீதி ஆபிவிருத்தி அதிகாரசபைசெயல்பட வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது. 31 ஜூலை 2022 அன்று காலாவதியாகும் செயல்திறன் பிணைப்பத்திரத்தை பணமாக்காமல், 12 ஜூலை 2021 அன்று பகுதியளவு முடிக்கப்பட்டிருந்த பணிகளைப் பொறியாளர் பொறுப்பேற்றமையால், வீதி ஆபிவிருத்தி அதிகாரசபைதனது இழப்புகளைக் குறைக்கும் திறனை இழந்ததாக அவதானிக்கப்பட்டது. | சமூகப் பிரச்சினைகளையும், வீதிப் பயனாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும், அவர்களின் பாதுகாப்பையும், பிற இழப்புகளையும் குறைப்பதற்கான ஒரே வழி, சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை இறுதி செய்வதே ஆகும். ஏனெனில், இந்தச் வீதிப் பகுதியை முடிந்தவரை விரைவில் முடிக்க வேண்டியுள்ளது. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் இருந்து விலகியது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவிலிருந்து அமைச்சின் பெறுகைகுழுவிற்கு அதிகார மட்டத்தைக் குறைப்பதன் மூலம், மீதமுள்ள வேலைகளிற்காக மேற்குறிப்பிட்ட பொதி, ரூபா. 2,919.56 மில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்த செலவில் இரண்டு பொதிகளாக மறு விலைமனு கோரப்பட்டது. முறையான காரணங்களுக்காக இந்தப் பிரிப்பு அவசியமாகக் கருதப்பட்டாலும், பெறுகைகையேட்டின் அத்தியாயம் 4.4.2-இன் படி, பிரிப்பதற்கு முன்னர் அத்தகைய பெறுகை மேற்கொள்வதற்கான உரிய அதிகாரம் வழங்கப்பட்ட பெறுகைகுழுவின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தைப் பிரிப்பதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகுழுவின் ஒப்புதல் பெறப்படவில்லை. | செயற்திட்டத்தை முடிப்பதில் கால மற்றும் பொருளாதாரத் திறனை உறுதி செய்வதற்காக, பெறுகை மட்டத்தினை சிஏபிசி மட்டத்திலிருந்து எம்பிசி மட்டத்திற்குக் குறைக்க சிஏஓ இனால் அனுமதி வழங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டுதலில் இருந்து ஏற்படும் விலகல் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். |
| (iv) | கணக்காய்வுக்கு வழங்ககப்பட்ட விவரங்களின்படி, ஆரம்ப ஒப்பந்தம் முடிவுக்கு வரும் வரை ஏற்பட்ட செலவு ரூபா.1,241.24 மில்லியனாவதுடன் முழு ஒப்பந்தத்தையும் முடிப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 2006.43 மில்லியனிலிருந்து ரூபா.4,160.80 மில்லியனாக அதிகரித்துள்ளது. இவ்வாறு, மீதமுள்ள பணிகள் இரண்டு ஒப்பந்தத் பொதிகளாக மீண்டும் வழங்கப்பட்டதால், மொத்த ஒப்பந்த மதிப்பு ரூபா. 2,154 மில்லியன் அதிகரித்துள்ளது. எனவே, ஒப்பந்தத்தில் ஏற்பட்ட அசாதாரண தாமதம் மற்றும் தவறான நிர்வாகம் ஆகியவை செயற்திட்டச் செலவை கணிசமாக அதிகரிக்க நேரடியாகப் பாதித்துள்ளதுடன். மேலும், இந்த விடயம் தொடர்பாக 17 நவம்பர் 2022 திகதியிட்ட பிசிஎல்/44/22/ஆர்டிஏ ஆந் திகதிய சட்டமா அதிபரின் கடிததிலும் இது வலியுறுத்தப்பட்டது. மேலும், ஓஎப்ஐடி 03 பொதியை எடுத்துக்கொள்வது தொடர்பாக ஒப்பந்ததாரருடனான தகராறு 2024 திசம்பர் 31வரையிலும் தீர்க்கப்படாமல் இருந்ததுடன், அத் திகதியில் ஒப்பந்ததாரருக்கு ரூபா. 35.57 மில்லியன் செலுத்தப்பட வேண்டியதாகக் காட்டப்பட்டது. | ஆரம்ப ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரரின் ஏல விகிதம் பொறியாளரின் மதிப்பீட்டை விட மிகக் குறைவாக இருந்ததால், புதிய ஒப்பந்தங்களின் ஏல விலை முந்தைய ஒப்பந்தத்தின் மதிப்பை விட அதிகமாக இருந்தது. மேலும், நிலப்பரப்பு மாற்றங்கள், அமுல்படுத்தக்கூடிய இடையூறுகள் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள், அனைத்துப் பொருட்களின் விலைகளையும் உயர்த்த வழிவகுத்தன. | ஒப்பந்த விலையை கணிசமான அளவு உயர்த்தியது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். |

**(ஆ) நாயகன்டுர நீர் வழங்கல் செயற்திட்டத்தில் நீர் குழாய்களை இடம் மாற்றுதல்**

பதுளை செங்கலடி வீதியைச் புனரமைத்து மேம்படுத்துவதற்காக, யல்கும்புராவிலிருந்து அக்கிரியான்கும்புராவிற்கு நீர்க் குழாய்களை இடமாற்றம் செய்ய, இச் செயற்திட்டம் ஆரம்பத்தில் பிபிலே பிரதேச சபைக்கு ரூபா. 142 மில்லியன் தொகையைச் செலுத்தியிருந்தது. இத்தொகை 29 டிசம்பர் 2015 மற்றும் 21 செப்டம்பர் 2016 ஆகிய திகதிகளில் இரண்டு சம தவணைகளாகச் செலுத்தப்பட்டது. வீதி அகழ்வு மூலம் சேவை வழித்தடம் அமைக்கப்படும் வரை நீர்க் குழாய் இடமாற்றும் பணி தாமதமடைந்தது. 2021 ஆம் ஆண்டில் வீதி சீரமைப்பு ஒப்பந்ததாரர் பணிநீக்கம் செய்யப்பட்டதால், வீதி அகழ்வுப் பணி தாமதமானது. மீதமுள்ள வீதி புனரமைப்பு ஒப்பந்தம் மீண்டும் வழங்கப்பட்ட பின்பு, அதிக விலை உயர்வு மற்றும் மூல விசாலத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் காரணமாக, கூடுதலாக ரூபா. 52.88 மில்லியன் தொகையைச் செலுத்துவதற்கு ரிஈசி மற்றும் பெறுகைகுழுவும் 30 அக்டோபர் 2023 அன்று அனுமதி அளித்தன. அதன்படி, அந்தத் தொகைகள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டன. பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்பட்டன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நீர்க் குழாய்களை இடமாற்றம் செய்வதற்காக, எந்தவொரு ஒப்பந்தமும் செய்துகொள்ளாமலும், பணியின் நோக்கத்தையும் நிறைவேற்றப்பட்டவேலையையும் அடையாளம் காணாமலும், எந்தவொரு முறையான பணம் செலுத்தும் நடைமுறையையும் பின்பற்றாமலும், ரூபா. 194.88 மில்லியன் முழுவதுமாக பிபில பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், எந்தவொரு பெறுகைநடைமுறையையும் பின்பற்றாமல், பிபில பிரதேச சபை வழங்கிய மதிப்பீட்டின் அடிப்படையில் அப்பணிகளுக்கான செலவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | செயற்திட்டத்திற்கு செயற்திறனான கால திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| (ii) | முதலில், 2016-ஆம் ஆண்டில் ரூபா. 142 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு, அந்த முழுத் தொகையும் 2018-ஆம் ஆண்டு இறுதி வரை பிரதேச சபையால் தங்களது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த நிதி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு மூன்றாம் தரப்பினரின் வசம் பொருளாதாரமற்ற முறையில் முடங்கிக் கிடந்தது | குடிசார் வேலைகளிற்கான ஒப்பந்தம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக, வீதி வழித்தடத்தை தயார் செய்யும் பணி தாமதமானது, அதன் விளைவாக, நீர்க்குழாய் இடமாற்றப் பணியும் தாமதமானது. | முறையற்ற கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்தத்தின் சிறப்பு நிபந்தனைகளின் பத்தி 14.7(b)-இன் படி, ஒவ்வொரு இடைக்காலப் கொடுப்பனவு சிட்டைகளுக்கும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது | தாமத வட்டி செலுத்துவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் முழுப் |

| | | | |
|---|---|---|---|
| | சான்றளிக்கப்பட்ட தொகையானது, பொறியாளர் அறிக்கைகள் மற்றும் துணை ஆவணங்களைப் பெற்ற 90 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் மேற்கூறியவாறு பணத்தைப் பெறவில்லை என்றால், தாமதக் காலத்தில் செலுத்தப்படாத தொகைக்கு நிதிக் கட்டணங்களைப் பெற ஒப்பந்ததாரருக்கு உரிமை உண்டு. எஸ்எப்டி/04 மற்றும் ஔஎப்ஜடி/03பி ஒப்பந்தங்களின் ஒப்பந்ததாரருக்குச் செலுத்த வேண்டிய தாமத வட்டியாக ரூபா. 2.18 மில்லியன் தொகையை பொறியாளர் சான்றளித்திருந்தது கவனிக்கப்பட்டது. ஒரு இடைக்காலப் பணச் சான்றிதழின் முழுமையான பணச் செலுத்தும் செயல்முறையின் ஒவ்வொரு படிக்கும் நேர ஒதுக்கீடுகளைப் பிரித்து, இந்த செயற்திட்டம் ஒரு பயனுள்ள கால அட்டவணையைப் பராமரிக்கவில்லை. எனவே, ஐபிசிகளைப் பொறியாளர் சான்றளித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு (ஈஆர்டி) அனுப்புவதற்கு 20 முதல் 44 நாட்கள் வரை எடுத்துக்கொண்டது கவனிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் செலுத்தும் செயல்முறையை முடிக்க ஈஆர்டி 23 முதல் 90 நாட்கள் வரை எடுத்துக்கொண்டது. | | பணம் செலுத்தும் செயல்முறையின் ஒவ்வொரு படிக்கும் நேர இடைவெளிகளைப் பிரித்து, ஒரு பயனுள்ள நேரத் திட்டத்தை உருவாக்குவதற்காகப் பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.. |
| (ஈ) | ஏற்கத்தக்க காரணங்களின் அடிப்படையில், பணிகளை நிறைவு செய்வதற்கு ஒப்பந்ததாரர் கால நீட்டிப்பு (ஈஓரி) பெற உரிமை உடையவர் ஆவார். | | |
| (i) | ஒப்பந்ததாரர் மூல ஒப்பந்தக் காலம் முடிவதற்குள் அல்லது முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட ஈஓரி திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும், 2024-ஆம் ஆண்டில் தொடர்ந்த 04 நடப்பு ஒப்பந்தங்களில் உள்ள ஒப்பந்ததாரர்கள், 18 நாட்கள் முதல் 254 நாட்கள் வரையிலான தாமதங்களுடன் ஈஓரிக்கு விண்ணப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கோரிக்கை சமர்ப்பிப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், ஒப்பந்ததாரர் பொறியாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். பொறியாளரின் பரிந்துரையின்படி, வேலையளிப்பவர் ஈஓரி ஒப்புதல் அளித்துள்ளார். | 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டம் எண்.19 இன் பிரிவு 38(1)(இ) இன் விதிகளுக்கு இணங்க மீளாய்வு மேற்கொள்ளப்படும்போது சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் மற்றும் எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மூல ஒப்பந்தக் காலம் அல்லது முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட ஈஓரி காலம் முடிவடைவதற்கு முன்னர் ஈஓரிக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், மீளாய்வு ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வந்த 04 ஒப்பந்தங்களில், தலைவரால் ஈஓரிக்கு அனுமதி அளிப்பதில் 89 நாட்கள் முதல் 324 நாட்கள் வரை தாமதம் ஏற்பட்டது அவதானிக்கப்பட்டது. | கோரிக்கை சமர்ப்பிப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், ஒப்பந்ததாரர் பொறியாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். பொறியாளரின் பரிந்துரையின்படி, தொழில்வழங்குநர் ஈஓரிக்கு அனுமதி அளித்துள்ளார். | 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டம் எண்.19 இன் பிரிவு 38(1)(இ) இன் விதிகளுக்கு இணங்க மீளாய்வு மேற்கொள்ளப்படும்போது சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் மற்றும் எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

**3.3 காணி சுவீகரிப்பு**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் 5530 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்ட போதிலும், 10 காணித் துண்டுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பெறப்படவில்லை. | பிரதேச செயலாளர் இந்த காணி துண்டுகளின் உரிமையாளரை அடையாளம் காணவில்லை, எனவே, அதன் விவரங்கள் இன்னும் மதிப்பீட்டிற்கு அனுப்பப்படவில்லை. | காணி சுவீகரிப்பு திட்டத்தின்படி, காணி சுவீகரிப்பு செயல்முறைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்புகளைத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நிர்ணயிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வுஆண்டின் இறுதியில், 5530 காணித் துண்டுகளில் 2201 காணித் துண்டுகளுக்கு மட்டுமே ரூபா. 600.56 மில்லியன் தொகை இழப்பீடாக வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது, மொத்த இழப்பீட்டுச் செயல்முறையின் 40 சதவிகிதத்தை மட்டுமே பிரதிபலிக்கிறது. | பஸ்ஸாரா மற்றும் லூனுகல பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான மொத்தம் 706 காணித் துண்டுகளிற்கான இழப்பீடு, பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பிலிப்பட்டு உள்ளது. தற்போது, இந்த செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. | காணி சுவீகரிப்பு திட்டத்தின்படி, நிலம் கையகப்படுத்தும் செயல்முறைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்புகளைத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தா நிர்ணயிக்க வேண்டும். |
| (இ) | இழப்பீடு வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, மீளாய்வு ஆண்டின் இறுதியில் 953 காணித் துண்டுகளுக்கு ரூபா. 166.83 மில்லியன் வட்டியானது பிஎம்யு ஆல் செலுத்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. மேலும், 2024 திசம்பர் 31இல், 1459 காணித் துண்டுகளுக்கு ரூபா. 72.2 மில்லியன் தாமத வட்டியாகச் செலுத்தப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. | தாமத வட்டியாக மதிப்பிடப்பட்ட தொகையானது, நீதிமன்றத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட காணித் துண்டுகளுக்கு , பெயரளவு மதிப்பின் கீழோ அல்லது முழுத் தொகையாகவோ உரியதாகும். | காணி சுவீகரிப்பு திட்டத்தின்படி, நிலம் கையகப்படுத்தும் செயல்முறைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்புகளைத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தா நிர்ணயிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செயற்திட்டம், காணி சுவீகரிப்பு செயல்முறை தொடர்பான முறையான தரவுத்தளத்தைப் பராமரிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவை கணக்காய்வில் சரிபார்க்க முடியவில்லை. | பிரதேச செயலகம் வழங்கிய தகவலின்படி, காணி சுவீகரிப்பு செயல்முறை தொடர்பான அனைத்துத் தரவுகளும் திட்டத்தில் முறையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. | முறையான தரவுத்தளத்தைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மீளாய்வு ஆண்டிற்கு ரூபா. 6,072 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இச் செயற்திட்டத்தால் ரூபா. 3,177.52 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இது, மீளாய்வுஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் 52.33 சதவீதமாகும். | காலநிலை சரிவு மீள்திறன் செயற்திட்டம் மற்றும் ரந்தெனிகல வீதியின் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களின் மூலம் சேமிப்பு ஏற்பட்டது. ஆனால், இந்த இரண்டு செயற்திட்டஙகளும் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க முடியவில்லை. | செயற்திட்ட நிதி திறம்பட பயன்படுத்தப்பட வேண்டும். |